# சிங்கப்பூர்
# தமிழ் வாசகம்

## இரண்டாம் வகுப்பு

# 2

# SINGAPORE TAMIL READER

## PRIMARY TWO

# சிங்கப்பூர் தமிழ் வாசகம்

## இரண்டாம் வகுப்பு

ஆசிரியர்கள்:

சீ. வரதப்பன்

அ. இராமசாமி

சே. செல்வராசு

பொ. மணிவாசகம்

அன்னை பதிப்பகத்தார்

புளோக் B, நெ. 17 - B, ஜாலான் டெக் வொய்,

சிங்கப்பூர் 2368.

பதிப்புரிமை

# முன்னுரை

சிங்கப்பூர் ஆங்கிலத் தொடக்கப்பள்ளிகளுக்கெனத் தமிழ்ப்பாட நூல்கள் இல்லாத குறையை நீக்கும் பொருட்டுச் சிங்கப்பூர் பாடத் திட்டத் தையொட்டி, "சிங்கப்பூர்த் தமிழ் வாசக" வரிசையையும், "சிங்கப்பூர்த் தமிழ்ப் பயிற்சி நூல்" வரிசையையும் எழுதியுள்ளோம்.

தமிழ் மொழியிலுள்ள 247 எழுத்துக்களுள் முதல் வாசக புத்த கத்தில் 132 எழுத்துக்களையும், இரண்டாம் வாசக புத்தகத்தில் 115 எழுத் துக்களையும் அறிமுகப் படுத்தியுள்ளோம். இம்முறையானது, ஆங்கிலத் தொடக்கப் பள்ளிகளில் தமிழ் கற்கும் மாணுக்கர்க்கு எல்லா எழுத்துக் களையும் ஓராண்டில் கற்றுக் கொள்ளும் சிரமத்தைப் பெரிதும் நீக்கும் என்பது உறுதி. முதல் வாசக புத்தகத்தில் பத்துப் பாடல்களையும் பத்துக் கதைகளின் விளக்கப் படங்களையும், இரண்டாம் வாசக புத்தகத்தில் பத்துப் பாடல்களையும் பத்துக் கதைகளின் விளக்கப்படங்களையும் சேர்த்துள் ளோம். கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள செய்யுள்களும் பழமொழி களும் குறிப்பிட்ட நூல்களில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், ஆரும் வகுப்பு மாணவர்கள் ஐந்தாம் வகுப்பு வரை வந்துள்ள செய்யுள்களையும் பழமொழிகளையும் அவசியம் அறிந்திருக்க வேண்டுமென்பதால், 3, 4, 5-ம் வாசக புத்தகங்களில் இடம்பெற்ற எல்லாச் செய்யுள்களையும் பழமொழி களையும் ஆரும் வாசக புத்தகத்தில் இடம் பெறச் செய்துள்ளோம். 5, 6-ம் வகுப்புப் பயிற்சி நூல்களில் தவணைக்கு மூன்று கருத்தறிதல், கட்டுரைப் பயிற்சிகளையும் தந்துள்ளோம்.

நாங்கள் இந்நூல்களை எழுத அரிய கருத்துக்களையும், ஆலோசனை களையும், திருத்தங்களையும் நல்கிய கல்வித்துறையைச் சேர்ந்த அனைவருக் கும், இந்நூல்களை வெளியிட முன்வந்த அன்னை பதிப்பகத்தாருக்கும் எங்கள் மனமுவந்த நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூல்களைப் பயன்படுத்தும் ஆசிரியர்கள் தாங்கள் கருதும் திருத்தங்களை அறிவித்தால், அவற்றை நன்றியுடன் ஏற்றுக்கொண்டு அடுத்த பதிப்பில் சேர்க்கப் பெரிதும் முயல்வோம்.

**ஆசிரியர்கள்**

# பதிப்புரை

சிங்கப்பூரின் தேவைக்கேற்ப "தமிழ் வாசக" வரிசையையும் "தமிழ்ப் பயிற்சி நூல்" வரிசையையும் எழுதியிருக்கும் ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள். நல்ல தமிழ்ப் பாட நூல்கள் இல்லாத குறையை நீக்கும் வகையில் எழுதப்பட்டிருக்கும் இந்நூல்கள் ஆங்கிலத் தொடக்கப் பள்ளிகளில் தமிழ் கற்கும் மாணுக்கர்க்கு நன்முறையில் பயிற்சி அளிக்கக் கூடியவையாகும்.

இப்பாட நூல்களின் ஆசிரியர்கள் தமிழை முதன் மொழியாகக் கொண்ட தமிழ்ப் பள்ளிகளிலும், தமிழை இரண்டாம் மொழியாகக் கொண்ட ஆங்கிலப்பள்ளிகளிலும் இருபதாண்டுகளுக்கு மேல் பணி யாற்றிப் பட்டறிவு பெற்றிருப்பவர்கள். சிங்கப்பூர் மாணுக்கரின் தேவையை உணர்ந்து எழுதப்பட்டிருக்கும் இந்நூல்களில் அவர்களின் பட்டறிவு உண்மைகளேக் காண முடிகிறது.

இக்குடியரசில் தமிழை இரண்டாம் மொழியாகக் கொண்டிருக்கும் பள்ளிகளும், மதிப்பிற்குரிய ஆசிரியர்களும் இந்நூல்களுக்குத் தரும் ஆதரவு, இவற்றை இயற்றியிருக்கும் ஆசிரியர்களின் முயற்சிக்கு ஊக்கம் தருவதோடு, தமிழுக்கும், சிங்கப்பூர் மாணுக்கரின் தமிழறிவு வளர்ச்சிக்கும் உரம் கொடுப்பதாகவும் இருக்கும்.

அன்னை பதிப்பகத்தார்

## பாடம் 1

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ |
| ச | சா | சி | சீ | சு | சூ |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ |
| ட | டா | டி | டீ | டு | டூ |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ |
| த | தா | தி | தீ | து | தூ |
| ந | நா | நி | நீ | நு | நூ |
| ப | பா | பி | பீ | பு | பூ |
| ம | மா | மி | மீ | மு | மூ |
| ய | யா | யி | யீ | யு | யூ |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ |
| ல | லா | லி | லீ | லு | லூ |
| வ | வா | வி | வீ | வு | வூ |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ |
| ற | றா | றி | றீ | று | றூ |
| ன | னா | னி | னீ | னு | னூ |

# பாடம் 2

அணில்

கழுகு

சூரியன்



கூண்டு

சிறுவன்

தீபம்

## பாடம் 3



எ லி

எ ருது

எ றும் பு

எ ச் சில்

எ ழுத் து

எ லும் பு

எ ழு து

எ ண் ப து

எ ழு ப து

எ ங் க ள்

எட்டு மணிக்கு வா.

எருது வண்டி இழுக்கும்.

உன் எண்ணம் என்ன?

## பாடம் 4

| | | | |
|---|---|---|---|
| க | கெ | ம | மெ |
| ங | ஙெ | ய | யெ |
| ச | செ | ர | ரெ |
| ஞ | ஞெ | ல | லெ |
| ட | டெ | வ | வெ |
| ண | ணெ | ழ | ழெ |
| த | தெ | ள | ளெ |
| ந | நெ | ற | றெ |
| ப | பெ | ன | னெ |

## பாடம் 5

செடி

நெருப்பு

நெல்
பெயர்
வெற்றி
செம்பு

தெரு
வெயில்
வெள்ளி
செருப்பு

செல்லம் வெல்லம் தின்றாள்.

மணிமாறன் வெற்றி பெற்றான்.

தென்னவன் பன்னீர் தெளித்தான்.

## பாடம் 6



# பெட்டி

# செண்டு

நெற்றி

மெழுகு

கெடுதி

வெள்ளம்

தெற்கு

செலவு

தெப்பம்

வெளிச்சம்

வெண்ணெய் உருக்கி நெய் எடு.

பூக்களால் செண்டு செய்.

தெருவில் வண்டிகள் செல்லும்.

## பாடம் 7



தெப்பம்
நீரில் மிதக்கும்.

செடிக்குத்
தண்ணீர் ஊற்று.

செங்கல்
சுவர் கட்டு.

நெற்றியில்
குங்குமம் இடு.

## பாடம் 8

உன் பெயர் என்ன?

என் பெயர் அல்லி.

அல்லி! நெருப்பு மூட்டு.

செம்பில் தண்ணீர் எடு;

வாளியில் மெல்ல ஊற்று;

அம்மா எடுத்துச் செல்வார்.

பாடம் 9



ஏ ணி

ஏ ழு

ஏன்
ஏறு
ஏலம்
ஏப்பம்
ஏமாளி

ஏரி
ஏடு
ஏனம்
ஏக்கம்
ஏற்றம்

ஏரியில் மீன் பிடி.

நீ ஏணியில் ஏறு.

ஏழு பூக்கள் பறி.

## பாடம் 10

| | | | |
|---|---|---|---|
| கெ | கே | மெ | மே |
| ஙெ | ஙே | யெ | யே |
| செ | சே | ரெ | ரே |
| ஞெ | ஞே | லெ | லே |
| டெ | டே | வெ | வே |
| ணெ | ணே | ழெ | ழே |
| தெ | தே | ளெ | ளே |
| நெ | நே | றெ | றே |
| பெ | பே | னெ | னே |

பாடம் 11



| | |
|---|---|
| **கேணி** | **தேள்** |
| மேடு | சேறு |
| கீழே | மேலே |
| வேர் | தேதி |
| இங்கே | வேடன் |

தம்பி! இங்கே வா.
தேக்கு மரங்கள் பார்.
நல்ல கேள்வி கேள்.
பேரூர் எங்கே உள்ளது?

பாடம் 12

சேவல் தேங்காய்

| | |
|---|---|
| மேகம் | தேகம் |
| நேரம் | வேகம் |
| கண்ணே | தேசம் |
| உள்ளே | வெளியே |

அழகன் தேன் குடித்தான்.
அன்பன் தேங்காய் வாங்கினான்.
அல்லி வேகமாய் நடந்தாள்.
மேனகா மேற்கே சென்றாள்.

## பாடம் 13

மேலே பார்!
தேன் கூடு.



மேகம்
மெதுவாய் நகரும்.

நான் பாடம்
படிக்கிறேன்.

செல்வி தேநீர்
குடிக்கிறாள்.

# பாடம் 14



அன்பா! எங்கே சென்றாய்?

நான் பள்ளிக்குச் சென்றேன்.

பள்ளியில் கணக்குச் செய்தேன்.

பாடம் நன்றாய்ப் படித்தேன்.

பள்ளி முடிந்து விட்டது.

நேரே வீடு திரும்பினேன்.

அம்மா உள்ளே இருந்தார்.

அப்பா வெளியே சென்றார்.

## பாடம் 15

ஐந்து

ஐவர்

ஐயம்
ஐம்பது
ஐந்நூறு
ஐயப்பன்

ஐயா
ஐப்பசி
ஐராவதி
ஐக்கியம்

ஐயா! எங்கே வந்தீர்?
ஐந்து வெள்ளி தாரும்.
ஐப்பசி தமிழ் மாதம்.

## பாடம் 16

| | | | |
|---|---|---|---|
| க | கை | ம | மை |
| ங | ஙை | ய | யை |
| ச | சை | ர | ரை |
| ஞ | ஞை | ல | லை |
| ட | டை | வ | வை |
| ண | ணை | ழ | ளை |
| த | தை | ள | ழை |
| ந | நை | ற | றை |
| ப | பை | ன | னை |

## பாடம் 17





**யானை** **குதிரை**

| | |
|---|---|
| கதை | தலை |
| மேசை | பானை |
| வெண்மை | குவளை |
| மெத்தை | தலையணை |

**சேவல் காலையில் கூவும்.**
**இரவில் சந்தை கூடும்.**
**கடையில் வளையல் விற்கும்.**
**காளை வண்டி இழுக்கும்.**

பாடம் 18



ஆமை

தவளை

| | |
|---|---|
| வாழை | தென்னை |
| தாமரை | வெற்றிலை |
| பலகை | பறவை |
| பையன் | குழந்தை |

பருத்தி ஆடை அணி.
ஆற்றில் அணை கட்டு.
பானையில் பாலை ஊற்று.
கூடையை மூலையில் வை.

## பாடம் 19

மாமி

வீணை வாசிக்கிறாள்.

அப்பா

கதை எழுதுகிறார்.

அம்மா

சட்டை தைக்கிறாள்.

தங்கை

படம் வரைகிறாள்.

## பாடம் 20



எருமை
வயலை உழுகிறது.

பாம்பு தவளையை
விழுங்குகிறது.

பூனை எலியைப்
பிடிக்கிறது.

ஆடு இலையைத்
தின்கிறது.

## பாடம் 21

முல்லை வடையை விற்ருள்.

காகம் கடைக்கு வந்தது.

அவள் காகத்தைப் பார்த்தாள்;

பசியால் துடிப்பதாய் நினைத்தாள்;

விரைந்து வடையை எடுத்தாள்;

கரையும் அதனிடம் வைத்தாள்;

காகம் வடையைத் தின்றது;

களிப்புடன் பறந்து சென்றது.

## பாடம் 22

| | |
|---|---|
| ஒன்பது | ஒட்டகம் |
| ஒலி | ஒளி |
| ஒன்று | ஒற்றன் |
| ஒருவன் | ஒருத்தி |
| ஒற்றடம் | ஒற்றுமை |

ஒழுக்கம் உயர்வு தரும்.

ஒட்டகம் பெரிய மிருகம்.

ஒற்றன் உளவு பார்ப்பான்.

ஒரே ஒரு பழம் தா.

## பாடம் 23

| | | | |
|---|---|---|---|
| க | கொ | ம | மொ |
| ங | ஙொ | ய | யொ |
| ச | சொ | ர | ரொ |
| ஞ | ஞொ | ல | லொ |
| ட | டொ | வ | வொ |
| ண | ணொ | ழ | ழொ |
| த | தொ | ள | ளொ |
| ந | நொ | ற | றொ |
| ப | பொ | ன | னொ |

## பாடம் 24





கொக்கு

கொடி

சொல்

நொய்

பொரி

ரொட்டி

பொன்

தொடு

கொம்பு

சொட்டு

நொய்க் கஞ்சியைக் குடி.

நமது கொடியை ஏற்று.

சிறிய ரொட்டியை வாங்கு.

## பாடம் 25





தொட்டில் தொப்பி

| | |
|---|---|
| மொழி | நொடி |
| மொட்டு | மொட்டை |
| மொச்சை | கொஞ்சம் |
| தொண்டை | பொம்மை |

தமிழ் மொழி பேசு.

ஒரு பொம்மை கொடு.

கொஞ்சம் பால் குடி.

# பாடம் 26





தொட்டி

கொசு

தொலைவு தொல்லை

கொல்லை சொண்டு

பொட்டு கொட்டு

பூங்கொடி பூந்தொட்டி

மல்லிகா மலர் கொய்தாள்.

மலர்விழி மாலை தொடுத்தாள்.

தேன்மொழி கழுத்தில் அணிந்தாள்.

## பாடம் 27

பொன்னி! இங்கே வா.

கொண்டையில் மலரைச் சூடு.

நொய்யை எங்கே வைத்தாய்?

பானையில் மொச்சையை இடு.

கடையில் ரொட்டியை வாங்கு.

நல்ல தொண்டு செய்.

தூய சொல்லைப் பேசு.

பாடம் 28



ஓநாய் ஓடம்

| | |
|---|---|
| ஓலை | ஓடு |
| ஓரம் | ஓசை |
| ஓமம் | ஓட்டம் |
| ஓணம் | ஓணான் |

எனக்கு ஓய்வு தேவை.
ஓடையில் தண்ணீர் ஓடும்.
ஓணான் வேலியில் இருக்கும்.
சாலையின் நடுவே ஓடாதே.

பாடம் 29

| | | | |
|---|---|---|---|
| கொ | கோ | மொ | மோ |
| ஙொ | ஙோ | யொ | யோ |
| சொ | சோ | ரொ | ரோ |
| ஞொ | ஞோ | லொ | லோ |
| டொ | டோ | வொ | வோ |
| ணொ | ணோ | ழொ | ழோ |
| தொ | தோ | ளொ | ளோ |
| நொ | நோ | றொ | றோ |
| பொ | போ | னொ | னோ |

பாடம் 30



# தோடு

# வான்கோழி

| | |
|---|---|
| போர் | மோர் |
| சோறு | கோபம் |
| நோக்கம் | தோட்டம் |
| பெற்ரேர் | மற்ரேர் |

பெற்ரேர் சொல்லைக் கேள்.

சோலையில் பூச்செடி நடு.

கோழியைக் கூண்டில் அடை.

## பாடம் 31



**மோதிரம்** **கோமாளி**

| | |
|---|---|
| நோய் | தோசை |
| தோழன் | யோசனை |
| போர்வை | போட்டி |
| இப்போது | அப்போது |

அக்காள் தோசை சுட்டாள்.

கோமாளி சிரிப்பு மூட்டினான்.

கோமதி கோலம் போட்டாள்.

பாடம் 36





கௌதாரி வௌவால்

மௌனி மௌனம்

கௌரவம் கௌசலை

சௌந்தரம் சௌந்தரி

யௌவனம் சௌக்கியம்

பௌத்தர் நல்லவர்.

கௌளி என்றால் பல்லி.

பௌர்ணமி முழு நிலவு.

வௌவால் இரவில் பறக்கும்.

# பாடம் 37



கௌசலை என் பாட்டி;

மௌன விரதம் இருந்தார்.

சௌந்தரம் என் தாத்தா;

சௌக்கியம் இல்லை என்றார்.

கௌதமர் என் மாமா;

பௌர்ணமி அன்று பிறந்தார்.

பாடம் 38

பூனை சீறுகிறது.



நாய் குரைக்கிறது.

குதிரை கனைக்கிறது.



யானை பிளிறுகிறது.

நரி ஊளையிடுகிறது.

## பாடம் 39



ஓவியர்
ஓவியம் தீட்டுகிறார்.

ஆசிரியர்
பாடம் போதிக்கிறார்.

பிள்ளைகள் திடலில்
விளையாடுகிறார்கள்.

மங்கை நாட்டியம்
ஆடுகிறாள்.

பாடம் 40



மாங்காய் புளிக்கும்.

பாக்கு துவர்க்கும்.

உப்பு கரிக்கும்.



கரும்பு இனிக்கும்.



பாகற்காய் கசக்கும்.



மிளகாய் உறைக்கும்.

## பாடம் 41

பையன்
வேகமாய் ஓடுகிறான்.

பழங்கள்
கூடையில் இருக்கின்றன.



பறவைகள்
ஆகாயத்தில் பறக்கின்றன.

குழந்தை
தொட்டிலில் உறங்குகிறது.

பாடம் 42

## சேவல் கூவிற்று

காலையில் கூவிற்று.

கிழக்கில் உதித்தது.

பையன்  விட்டு எழுந்தான்.

உணவு கொடுத்தார்.

அவன் சென்றான்.

பாடங்கள் படித்தான்.

பள்ளியில் அடித்தது.

பையன்  திரும்பினான்.

பாடம் 43

## சாலையைக் கடப்பது எப்படி?

1 சாலை ஓரத்தில் நில்.

2 உன் வலப்பக்கம் பார்.

3 பின், இடப்பக்கம் பார்.

4 மீண்டும்
வலப்பக்கம் பார்.

5 வண்டி வராவிடில்
சாலையைக் கட.

சீக்கிரம் நட, ஓடாதே.

பாடம் 44

# அன்பனின் அண்டை வீட்டார்



1. எங்கள் அண்டை வீட்டில் லிம் வாழ்கிறான்.

2. லிம்மின் அன்னை எங்களுடன் அன்பாய்ப் பழகுவார்.

3. அவனுடைய பெற்றோர்கள் எங்கள் குடும்ப நண்பர்கள்.

4. ஓய்வு நாள்களில் அவர்கள் எங்கள் வீட்டுக்கு வருவார்கள்.

5. சில வேளைகளில் நாங்களும் அவர்கள் வீட்டுக்குச் செல்வோம்.

## பாடம் 45





ரோஜாப்புஷ்பம் திராக்ஷைப் பழங்கள்

ஜ ஸ ஷ ஹ க்ஷ

ராஜா ஸ்திரீ

பக்ஷி நஷ்டம்

ஜீவன் சந்தோஷம்

ஸ்ரீதரன் ஸ்ரீரங்கம்

ஸர்ப்பம் படம் எடுக்கும்.

ஹம்ஸம் என்பது அன்னம்.

ஹுமாயூன் ஓர் அரசர்.

எனக்கு ஜுரம் கண்டது.

கஷாயம் எனக்கு இஷ்டம் இல்லை.

ஜுலை மாதம் வெப்பம் அதிகம்.

பாடம் 46



எறும்பு புற்றில் வசிக்கும்.

அது ஊர்ந்து செல்லும்.

நண்டு வளையில் வசிக்கும்.

அது காலால் நடக்கும்.

குதிரை லாயத்தில் வசிக்கும்.

அது வேகமாய் ஓடும்.

மீன் தண்ணீரில் வசிக்கும்.

அது நன்றாய் நீந்தும்.

பருந்து கூட்டில் வசிக்கும்.

அது உயரப் பறக்கும்.

கதை *1*

# ஏமாறிய காகம்

1. ராகவன் வடை விற்ருன். ஒரு காகம் ஒரு வடையைக் கௌவிச்சென்றது.

2. ஒரு நரி அதைப் பார்த்தது.

3. நரி காகத்தைப் பார்த்து, "காக்கையாரே! காக்கையாரே! உங்கள் பாட்டைக் கேட்க எனக்கு ஆசையாக இருக்கிறது! தயவு செய்து ஒரு பாட்டுப் பாடுங்கள்!" என்று கேட்டது.

4. காகம் "கா, கா, கா" என்று கரைந்தது. வடை கீழே விழுந்தது.

5. நரி வடையைக் கௌவிக்கொண்டு ஓட்டம் பிடித்தது.

6. அந்தோ பாவம்! காகம் ஏமாறிப்போய் விட்டது.

'புகழ்ச்சியை நம்பாதே'

# கதை 2

# எறும்பும் புறாவும்

1. ஒரு கட்டெறும்பு ஓடையில் விழுந்து விட்டது. அது கரை ஏற முடியாமல் தத்தளித்தது.

2. மரத்தில் ஒரு புறா இருந்தது. அது ஓர் இலையை எறும்பினிடம் போட்டது.

3. எறும்பு இலையில் ஏறிக் கரையில் ஒதுங்கிற்று.

4. அங்கு ஒரு வேடன் வந்தான்; புறாவைக் கொல்லக் குறி பார்த்தான்.

5. எறும்பு வேடனின் காலைக் கடித்தது.

6. வேடன் காலை உதறினான். அவனுடைய குறி தவறிவிட்டது. சத்தம் கேட்ட புறா பறந்து சென்றது.

'உதவி வீண் போகாது'

# கதை 3

# பேராசை கொண்ட நாய்

1. ஒரு நாய் உணவு தேடி அலைந்தது.

2. வழியில் அது ஓர் எலும்பைக் கண்டது.

3. அது எலும்பைப் பற்றிக்கொண்டு ஓடிற்று.

4. நாய் ஒரு பாலத்தில் சென்றது. அதனுடைய நிழல் நீரில் தெரிந்தது.

5. அந்த எலும்பையும் தின்ன அது ஆசைப் பட்டது. அது நிழலைப்பார்த்துக் குரைத்தது. அதன் வாயில் இருந்த எலும்பு நீருக்குள் விழுந்துவிட்டது.

6. நாய் கவலையுடன் சென்றது.

'பேராசை பெரு நட்டம்'

# கதை 4

# சிங்கமும் எருதுகளும்

1. ஒரு காட்டில் நான்கு எருதுகள் இருந்தன. அவை ஒற்றுமையாய் மேய்ந்தன.

2. ஒரு நாள் ஒரு சிங்கம் எருதுகளின் மேல் பாய்ந்தது. ஆனால் நான்கு எருதுகளும் சேர்ந்து சிங்கத்தை முட்டித்தள்ளின.

3. சில நாள்கள் சென்றன. அந்த எருதுகள் தமக்குள் சண்டை போட்டுக் கொண்டன.

4. பின்பு அவை தனித்தனியாக மேய ஆரம்பித்தன.

5. சிங்கம் 'இதுதான் சமயம்' என்று ஓர் எருதைக் கொன்று தின்றது. மற்ற எருதுகள் உதவிக்கு வரவில்லை.

6. அடுத்தடுத்த தினங்களில் மற்ற எருதுகளையும் சிங்கம் கொன்று தின்றது.

'ஒற்றுமையே பலம்'

## கதை 5

# இடைச்சிறுவனும் புலியும்

கதை 6

# காகமும் நாகமும்

## கதை 7

# நாயும் அல்லி மலரும்

கதை 8

# ஓநாயும் ஆட்டுக் குட்டியும்

கதை 9

# அறிவற்ற ஆடுகளும் அறிவுள்ள ஆடுகளும்



கதை 10

# பொன் வாத்து

## 1. கடற்கரை

1. கடற் கரைக்குச் சென்றிடலாம்
வா, தம்பி, வா—அங்கே
காற்று வாங்கி வந்திடலாம்
வா, தம்பி, வா.

2. உடல் வளர நல்லதடா
வா, தம்பி, வா—அந்த
உப்பங் காற்றின் சக்தியடா
வா, தம்பி, வா.

3. வெள்ளை மணல் மீதிருப்போம்
வா, தம்பி, வா—சற்றே
விளை யாடித் திரும்பிடுவோம்
வா, தம்பி, வா.

4. பிள்ளை களும் வந்திடுவார்
வா, தம்பி, வா—அங்கே
பெரிய வரும் கூடிடுவார்
வா, தம்பி, வா.

(அழ. வள்ளியப்பா)

## 2. பூனையார்

மியாவ் மியாவ் பூனையார்!
மீசைக் காரப் பூனையார்!
ஆள் இல்லாத வேளையில்
அடுக் களைக்குள் செல்லுவார்!
பால் இருக்கும் சட்டியைப்
பார்த்துக் காலி பண்ணுவார்!
மியாவ் மியாவ் பூனையார்!
மீசைக் காரப் பூனையார்!

இரவில் எல்லாம் சுற்றுவார்
எலிகள் வேட்டை ஆடுவார்
பரணில் ஏறிக் கொள்ளுவார்
பகலில் அங்கே தூங்குவார்
மியாவ் மியாவ் பூனையார்
மீசைக் காரப் பூனையார்

மெல்ல மெல்லச் செல்லுவார்
மேலும் கீழும் தாவுவார்
லொள் லொள் சத்தம் கேட்டதும்
நொடியில் ஓடிப் பதுங்குவார்
மியாவ் மியாவ் பூனையார்
மீசைக் காரப் பூனையார்

(அழ. வள்ளியப்பா)

## 3. நாய்க்குட்டி

தோ — தோ — நாய்க்குட்டி.
துள்ளி வா வா நாய்க்குட்டி.
உன்னைத் தானே நாய்க்குட்டி,
ஓடி வா வா நாய்க்குட்டி.
கோபம் ஏனோ நாய்க்குட்டி?
குதித்து வா வா நாய்க்குட்டி.
கழுத்தில் மணியைக் கட்டுவேன்;
கறியும் சோறும் போடுவேன்.
இரவில் இங்கே தங்கிடு.
எங்கள் வீட்டைக் காத்திடு.

(அழ. வள்ளியப்பா)

## 4. எறும்பு

சின்னச் சின்ன எறும்பே!
சிங்காரச் சிற்றெறும்பே!
உன்னைப் போல நானுமே,
உழைத்திட வேணுமே!
பலர் ஒன்றாய்க் கூடுவீர்;
பண்டங்களைத் தேடுவீர்;
புல மாக நாடுவீர்;
புற்றில் கொண்டு போடுவீர்!
ஒன்றன் பின்னே ஒன்றாய்,
ஊர்ந்துபோவீர் நன்றாய்!
நன்றாய் உம்மைக் கண்டே,
நடந்தால் நலம் உண்டே!

(கா. நமச்சிவாய முதலியார்)

## 5. பச்சைக்கிளி

1. பச்சைக் கிளியே! வா! வா;
பாலும் சோறும் உண்ண வா;
கொச்சி மஞ்சள் பூச வா;
கொஞ்சி விளை யாட வா.

2. கவலை எல்லாம் நீங்கவே,
களிப் பெழுந்து பொங்கவே,
பவழ வாய் திறந்து நீ
பாடுவாயோ தத்தம்மா!

3. வட்டமாய் உன் கழுத்திலே,
வான வில்லை ஆரமாய்,
இட்ட மன்னர் யாரம்மா?
யான் அறியக் கூறம்மா!

4. பையப் பையப் பறந்து வா,
பாடிப் ‘பாடிக் களித்து வா;
கையில் வந்திருக்க வா,
கனி அருந்த ஓடி வா.

(கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை)

## 6. பசுவும் கன்றும்

1. தோட்டத்தில் மேயுது
வெள்ளைப் பசு — அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக்குட்டி.

2. அம்மா என்குது
வெள்ளைப் பசு — உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக்குட்டி.

3. நாவால் நக்குது
வெள்ளைப் பசு — பாலை
நன்றாய்க் குடிக்குது
கன்றுக்குட்டி.

4. முத்தம் கொடுக்குது
வெள்ளைப் பசு — மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக்குட்டி.

(கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளை)

## 7. எட்டுக் குட்டிப் பூனைகள்

1. எட்டுக் குட்டிப் பூனைகள்
குட்டை குட்டை யானவை
அட்டைப் பெட்டிப் பொந்தினுள்
முட்டி முட்டிப் பார்த்தன.

2. அட்டைப் பெட்டி யதனிலே
பட்டுச் சட்டை மறைவிலே
குட்டிக் குட்டிச் சுண்டெலி
எட்டி எட்டிப் பார்த்தது.

3. கிட்டக் கிட்டப் பெட்டியுள்
குட்டிக் குட்டிச் சுண்டெலி
வட்ட மிட்டுச் சட்டென
எட்ட வெளியில் பாய்ந்தது.

4. குட்டி எட்டும் திடுக்கிட்டே
குட்டிக் கரண மிட்டதால்
எட்டிப் பிடிக்கத் தாவுமுன்
குட்டி எலியும் மறைந்ததே!

(பெ. தூரன்)

## 8. மழையே வா!

1. மழையே மழையே வா வா
மண்ணும் விண்ணும் குளிரவா
தழைகள் நிறைய மரங்களிலே
தளிர்க்கச் செய்ய ஓடிவா!

2. நன்மை விளைய நாளும்வா
நன்னீர் ஏரி நிறையவா
நன்ருய்ப் பசுமை மிளிர்ந்திட
நாளும் புற்கள் வளரவா!

3. வள்ளல் பாரி போல நீ
வையம் களிக்கப் பெய்துவா!
வெள்ளம் பாயும் ஆற்றிலே
வெள்ளி மீன்கள் மேயவா!

4. கடகட வென்றே உருண்டிடும்
கடலின் நீரை முகந்துவா!
சடசட வென்னப் பொழிந்துவா
சந்தன வெயிலும் காயவா!

5. தவளை கத்தி அழைக்குதே,
தாகமோ உயிர்கள் தவிக்குதே?
கவலை எனக்கும் பெருகுதே
கப்பல் எப்போ விடுவதோ?

(வ. கோவிந்தராசன்)

## 9. அழுதபிள்ளை

1. அழுத பிள்ளை சிரிக்குமாம்.
அம்மா வந்தால் குதிக்குமாம்.
கழுத்தைக் கட்டிக் கொள்ளுமாம்.
'கலக' லென்று பேசுமாம்.

2. அரும்பு மலர்ந்து விரியுமாம்.
அருணன் வரவே சிரிக்குமாம்.
விரும்பி அணியச் செய்யுமாம்.
வீசி மணத்தைப் பரப்புமாம்.

3. மடியும் செடிகள் நிமிருமாம்.
மழையைக் கண்டு தழைக்குமாம்.
அடியி லுள்ள வேர்களும்.
ஆழ மாகச் செல்லுமாம்.

4. படுத்த கன்று எழும்புமாம்.
பசுவைக் கண்டு துள்ளுமாம்.
கொடுத்த பாலைச் சப்பியே
குதித்துக் குதித்து ஓடுமாம்!

(அழ. வள்ளியப்பா)

# 10. பல்

நல்ல பண்டம் தின்னவே
நமக்கு மிக்க உதவிடும்
பல்லைப் பற்றி இன்றுநான்
பாட்டுக் கட்டப் போகிறேன்.

பாப்பா வாக இருக்கையில்
பல்லே இல்லே அப்புறம்,
கேட்பாய்; அதுவும், அரிசிபோல்
கிளம்ப லாச்சு, முதலிலே.

வளர்ந்து, வளர்ந்து வரிசையாய்
வாயை நிரப்ப லாயின.
தளர்ந்து போன கிழவரைத்
தனியே விட்டுப் பிரிந்தன.

முறுக்கு, சீடை யாவையும்
நொறுக்கி உள்ளே தள்ளிடும்;
சிரிக்கும் போது அழகுக்கே
சிறப்பு மெத்தக் கொடுத்திடும்.

முத்துப் பற்கள் போய்விடின்
முகத்தின் அழகும் போகுமே.
நித்தம் நித்தம் பற்களைச்
சுத்தம் செய்து காப்போமே!

(அழ வள்ளியப்பா)

# தமிழ் எழுத்துக்கள்

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ | க் |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ | ங் |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ | ச் |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ | ஞ் |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ | ட் |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ | ண் |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ | த் |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ | ந் |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ | ப் |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ | ம் |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ | ய் |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ | ர் |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ | ல் |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ | வ் |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ | ழ் |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ | ள் |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ | ற் |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ | ன் |

# SINGAPORE TAMIL READER

PRIMARY TWO
*(Second Language)*

By
S. VARATHAPPAN
A. RAMASAMY
S. SELVARAJU
P. MANIVASAGAM

*Published By:*
ANNAI PUBLISHERS,
Block B No. 17-B Jalan Teck Whye,
Singapore - 2368

Copyright

Printed by P. K. S. Printers Sdn. Bhd., 23 Jalan Tandang, Petaling Jaya.